# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு (அரசியல்)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

## உள்ளுறை

பக்கம்

பதிப்புரை
முன்னுரை

அரசியல்
1. அரசியல் அறிஞன்
2. மணல் வீடு
3. பூக்களிற் புழுக்கள்
4. ஏச்சு மேடை
5. தேர்தலாற் கண்ட பயன்?
6. அந்தோ அரசியலே!
7. அரசியல் அரங்கம்
8. வண்ணமும் எண்ணமும்
9. நாடு உருப்படுமா?
10. தேர்தல் திருவிழா
11. தேர்தல் நினைவு
12. கழகம் வென்றது
13. காக்குந் தொழில் வல்லான்
14. வெற்றி மலர் சூடுங்கள்!

வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை
வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு
பாரி முடியரசன் பற்றி

# அரசியல்

[வீறுகவியரசர் முடியரசனார் ‘அரசியல்’ பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தாகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. அரசியல் அறிஞன்

**(நூல்:—கவியரங்கில் முடியரசன்)**

கலிவெண்பா

… … … … … … … … …

இல்லாள் ஏக்கம்

“கூரை பிரிந்ததனால் கொட்டுமழை அத்தனையும்
நேரே புகுந்து நிறைந்ததுகாண் நம்மில்லில்

ஈரமிகு மண்சுவர்தான் எத்தனைநாள் தாங்கிவரும்?
ஓரங் கரைந்தே ஒருபக்கஞ் சாய்ந்ததெனச்

சொல்லாத நாளில்லை சொல்லிப் பயனில்லை!
கல்லாகிப் போனீரோ? கற்பனையில் வாழ்கின்றீர்?

ஊரெல்லாம் இப்படியா உங்களைப்போல் வாழ்கின்றார்?
யாரிடம்போய் நானழுவேன்!” என்றழுதாள் என்மனைவி:

தூற்றாதே வாழ்க்கைத் துணைவியுனை வேண்டுகிறேன்;
[1]நேற்றே விளம்பி நெடுமூச்சு வாங்கவைத்தாய்!

[2]இன்று விளம்பி எடுக்காதே என்னுயிரை!
ஒன்று திரண்டிங் குருவாகும் கற்பனையால்

புத்துலகஞ் செய்யப் புறப்பட்ட பாவளத்தைக்
கத்திக் கெடுக்காதே கட்டழகி எட்டியிரு!

என்றுவாய் மூடவில்லை, ஏந்திழையாள் புன்னகைத்து,
“நன்று கவிமணியே! நான்விலகி நிற்கின்றேன்,

வீட்டைப் புதுக்க விதியில்லை, முன்னின்று
நாட்டைப் புதுக்கவழி நாடுகிறீர்! அவ்வழியைத்

தெள்ளத் தெளிவாத் தெரிவை எனக்குரைப்பீர்!
உள்ளத் திருத்தி உணவை மறந்திருப்போம்”

என்றாள் அருகிருந்தாள்; என்னுயிரே! கூறுவன்கேள்!
பொன்றா நலம்பயக்கும் புத்துலகங் காண்பதெனில்

புத்துலகம் காணும் வழி

மாசு மறுவகற்றி, மாண்பை மிகப்பெருக்கிக்,
காசு பணங்கொழிக்கக், கல்வி நலஞ்செழிக்க,

மேழித் தொழில்சிறக்க, மீக்கூர் பசிபறக்க,
ஆழிக் கடல்வணிகம் ஆயிரம்பல் லாயிரமாய்ப்

பல்கிவர வேண்டுமடி! பாட்டால் முடிவதுவோ?
சொல்லும் வினைமுடிக்க நல்லரசே வேண்டுமடி!

புன்மைச் செயலொழித்து நன்மை புகவிடுத்தால்
உண்மைப் புதுவுலகம் உண்டாகும் ஈதுண்மை;

ஆள்வோர் புகுத்துசெயல் அத்தணையும் நன்றேஎன்
றாள்வோரே தீர்ப்பளித்தல் ஆமோ? அரசியலில்

வல்லவராய் நாளை வருவதெலாம் காண்கின்ற
நல்லவராய்க் கல்வி நலங்கொண்ட பேரறிஞர்

சிந்தித்துச் சீர்தூக்கிச் செப்புகிற நல்லுரையை
வந்தித்துப் போற்றி வரவேற்க வேண்டுமடி!

‘‘ஆள்கின்ற நாமே அறிஞரிவர் சொற்கேட்டால்
தாழ்வன்றோ?’’ என்னும் தவறான எண்ணத்தால்

புத்துலகம் காண்பதில்லை; புற்றுலகங் காட்டிவிடும்
தத்தைமொழி! என்றேன்; தடுத்து நிறுத்தி,

‘‘அறிஞர் புகழ்பாடல் ஏனத்தான்? நன்கு
புரியும் படியாப் புகன்றிடுவீர்’’ என்றுரைத்தாள்

### வானொலியார் கட்டளை

கண்ணழகி! [3]வானொலியார் கட்டளைதான், புத்துலகம்
பண்ணுதற்கு நல்லறிஞன், பாவல்லான், விஞ்ஞானி,

ஏருழவன், வாணிகன், இத்தகையார் தம்பங்கில்
பேரறிஞன் பங்கிசைக்கப் பேணிக் கொடுத்ததனால்

பாடுகின்றேன் என்றதும், அப் பாவை விழிசிவந்து,
‘‘நாடு புதுமைபெற நங்கையரைத் தள்ளிவிட்டீர்!

புத்துலகில் பெண்ணைப் புதைத்துவிட்டீர்!’’ என்றெழுந்தாள்;
இத்தவறு நானோ இழைத்தேன்? கனிமொழியே!

எய்தவனை நோகா தெனைக்கடிந்தாய்! வானொலியார்
செய்தபிழைக் கென்செய்வேன்? சேயிழையே! சற்றுக்கேள்!

### அறிஞன் இல்லா அரசு

பொற்சிலம்பை விற்கவந்த பூம்புகார்க் கோவலனைப்
பொற்கொல்லன் சொற்கேட்டுப் பொல்லாக் கொலைசெய்து

பாண்டியன் செங்கோல் பழுதுபடக் காரணமென்?
ஆண்டோர் அறிஞனிலாக் காரணமே ஆகும்;

### அரசியலில் அறிஞர்

அறிவுடையோன் நல்லா றரசேகின் நல்ல
நெறியுடைய நாடாகும் நேரிழையே! முன்பிருந்த

ஆள்வோர் குடிகளிடம் அண்டி வரிவாங்கி
வாழ்முறைகள் கூறி வழிசெய்தார் அன்றறிஞர்;

தம்முட் பகைகொண்ட தார்வேந்தர் போர்தவிர்த்துச்
செம்மை நெறிநடக்கச் செய்தார்கள் அன்றறிஞர்;

மாதே அரசியலில் மாண்புடன் ஆள்பவர்கள்
தீதிலா யாழுக்குத் தெள்நரம்பே போல்வார்கள்,

வீணை நரம்பை மிழற்ற விரல்வேண்டும்,
ஆணை செலுத்தும் அரசுக் கிவர்வேண்டும்,

பாட்டுச் சிதையாமல் பண்படுத்தி இன்புறுத்திக்
காட்டும் இலக்கணமாய்க் காவல் புரிவார்கள்,

காதல் வளர்ந்தொளிரக் கண்பார்வை எப்படியோ
ஓதும் அரசுக் குயர்அறிஞர் அப்படியாம்;

### அரசியல் போலிகள்

இந்நாட் டரசியலும் இன்னுந் தலைசிறந்த
எந்நாட் டரசியலும் எண்ணிஎண்ணிக் கற்றிருப்பார்

கல்விச் சிறப்பிருக்கும் கற்றபடி பேச்சிருக்கும்

இல்லை இவர்க்குநிகர் என்னும் படியிருக்கும்

ஆனால் அரசியலில் ஆளும் பொறுப்பேற்கப்
போனாலோ அத்தனையும் போயொழியும், அப்பதவி

காத்துச் சுவைத்திருக்கக் கற்பனையும் சூழ்ச்சிகளும்
மூத்துத் தலைதூக்கும் மூளை குழம்பிவிடும்

வேண்டியவர் வேண்டாதார் வேண்டி அலைந்திடுவர்
ஈண்டவரால் புத்துலகம் காண்டல் எளிதாமோ?

வல்லவராய் மட்டும் வருபவரால் ஏதுபயன்?
நல்லவராய் நாட்டு நலம்விழைவார் வேண்டும்?

குடிஎன்றால் கள்என்று கூறும்அறி வாளர்
படிசிறக்க ஆளப் பயன்படுதல் இல்லை;

அரசென்றால் சுற்றும் மரமென்பார் தாமும்
அரசு செலுத்துதற் காகாரே! உண்மைக்

குடியரசின் நற்பொருளைக் கூர்த்துணர்ந்தார் நல்ல
படியரசை ஆளப் பயன்படுவர் மாமயிலே!

அறிஞர் கடமை

ஆதலினால் அவ்வறிஞர் ஆசை பதவிஎனும்
போதைகளில் சிக்குண்டு போகாமல், அஞ்சாமல்,

பாழும் அடிமைப் பழிசுமந்து தந்நலமே
வாழும் முறையாலே வால்பிடித்து வாழாமல்,

நாட்டு நலங்கருதி, நாவீறு மிக்குயர்ந்து,
கேட்டுச் செயலொழித்துக், கீழ்மைக் குணமொழித்துச்,

சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனையில் காண்பவற்றை
முந்திப் படைத்தரசை முன்னேற்ற வேண்டுமடி!

அன்றே புதுவுலகம்! அவ்வுலகில் நாமரசர்!
என்றேன்; ''அறிஞரிலே அத்தகையார் உள்ளனரோ?''

என்னுமோர் ஐயம் எழுப்பினள் என்மனையாள்;
இன்னும் இருக்கின்றார் எத்துணையோ பேரென்றேன்;

அவன் யார்?

''ஓரிருவர் சொல்லுங்கள் அத்தான்!'' எனவுரைத்தாள்;
யாரெனநான் ஈங்குரைத்தல் நன்றன்று மற்றொருநாள்

அப்பெயரைச் சொல்கின்றேன் என்றேன்; முகஞ்சுழித்துத்
''தப்பென்ன? சொல்'' கென்றாள்; சத்தமின்றிக் காதருகே

[4]பேர்சொன்னேன்; மாமழையின் பேரருளால் என்வீட்டில்
நீர்சொட்டக் கண்விழித்தேன் நேற்று.

---

**பாடற் குறிப்பு:–** 14.4.1958 அன்று, திருச்சி வானொலி நிலையம் நடத்திய விளம்பி ஆண்டுப் பிறப்புக் கவியரங்கில், 'புதியதோர் உலகு–அரசியல் அறிஞன்' என்ற தலைப்பில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. நேற்றே விளம்பி – நேற்று ஏவிளம்பி (ஆண்டு), நேற்றே சொல்லி. 2. இன்று விளம்பி – இன்று விளம்பி (ஆண்டு), இன்று சொல்லி, 3. அறிஞன், கவிஞன், விஞ்ஞானி, உழவன், வாணிகன் என்பன வானொலியார் தந்த தலைப்புகள். 4. கவிஞர் சொன்ன அறிஞர் யாரென சிந்தித்துணர்க.

## 2. மணல் வீடு

**(நூல்:–பாடுங் குயில்)**

வீசும் அலைக்கடல் ஓரம் – மாலை
வெய்யில் குறைகின்ற நேரம்
பேசுங் கவிமக ளோடு – நெஞ்சம்
பின்னிக் கிடந்ததன் போடு 1

சின்னஞ் சிறுமியர் கூடி – அங்குச்
செய்தனர் ஓர்மணல் வீடு
தின்னுங் கறியுடன் சாறு – கூட்டு
செய்து வடித்தனர் சோறு 2

வட்டமிட் டொன்றியி ருந்தே – உண்டனர்
வாரிப் படைத்தும கிழ்ந்தே
எட்டியி ருந்துண வுண்ணும் – கெட்ட
எண்ணமங் கெப்படி நண்ணும்? 3

மாவிலை தோரணம் உண்டு – நல்ல
மாப்பிளை பெண்களும் உண்டு
கூவினர் ஆர்த்தனர் கண்டு – மேளம்
கொட்டினர் வாயொலி விண்டு 4

எப்படி யோஅவ ரண்டை – சட்டென்
றேற்பட்ட தேஒரு சண்டை
அப்படி யேமணல் வீடு – தூள் தூள்
ஆகிய தேசிறு மேடு 5

நீளலைக் கைகளால் தோழி – கொட்டி
நின்று சிரித்ததே ஆழி
[1]கேளென நின்றவர் தம்முள் – வந்த
கீழ்மையைக் கண்டுளம் விம்மும் 6

அவ்விளை யாட்டினைப் பார்த்தேன் – நாட்டின்
அரசியல் போக்கையும் பார்த்தேன்
எவ்விதம் வேதனை சொல்வேன் – இந்த
இழிவினை எப்படி வெல்வேன்! 7

---

**பாடற் குறிப்பு:–** 28.11.1980 ஆம் நாள் பாடியது.
**அருஞ்சொற் பொருள்:–** 1. கேளென – உறவென.

## 3. பூக்களிற் புழுக்கள்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

சேர்ந்தொரு கட்சி சொல்லித்
தேர்தலில் நிற்பார் தம்மை
ஓர்ந்துணர் ஆற்ற லின்றி
உவப்புடன் வாக்க ளித்துத்
தேர்ந்தெடுத் தாட்சி மன்றுட்
சென்றிட வழிவ குத்தோம்
போந்ததும் வேறு கட்சி
புகுந்திட மோப்பம் பார்ப்பர் 1

[1]ஆசற்ற தூயர் போல
ஏய்ப்புரை யாற்றிப் பின்னர்
ஆசைக்கே அடிமை யாகி
அவர்நிலை மறந்தா ராகிக்
காசுக்குத் தம்மை விற்கும்
கயவராற் சட்ட மன்றம்
மாசுக்குட் படுமே யன்றி
மாட்சிமைக் காப்ப டாது 2

கொள்கையின் மேன்மைக் காக
மாறிடிற் குற்ற மில்லை
கொள்ளையை மனத்திற் கொண்டு
கொம்புகள் தாவிச் சென்றால்
‘எள்ளலுக் குரிய ரானார்
இழிகுணம் படைத்தா’ ரென்றே
[2]அள்ளலில் எறிவ தன்றி
அவரையார் மதிப்பா ரிங்கே? 3

கொள்ளைகள் கொலைகள் செய்வோர்
பதுங்கிடும் கூடா ரம்போல்
உள்ளதே சட்ட மன்றம்’
என்றதோர் உணர்வு தோன்றி
உள்ளமே நொந்து போனார்
ஊரவர்; அவர்தம் நெஞ்சில்
வெள்ளமே திரண்டு வந்தால்
வீணரின் நிலைஎன் னாகும்? 4

வாக்குகள் அளித்தோம் சட்ட
மன்றமர் வாய்ப்பைப் பெற்றோர்
ஆக்குவர் நன்மை யென்றே
ஆவலிற் காத்தி ருந்தோம்;
தாக்குதல் நடத்து கின்றார்;
தகாமொழி பேசு கின்றார்
பூக்களில் தேனீ யில்லை
புழுக்களே நெளியக் கண்டோம் 5

நலந்தரு சொற்போர் அங்கே
நடத்துவர் என்றி ருந்தோம்
[3]வலம்படு மற்போர் ஒன்றே
நடத்திட வகுத்து நின்றார்;
சிலம்பமும் ஆடு கின்றார்
செருப்புகள் வீசு கின்றார்;
துலங்குமா சட்ட மன்றம்?
தூவென இகழ்தற் காகும். 6

தேர்தலில் அரசின் சார்பிற்
செலவிடும் தொகைக ளெல்லாம்
யார்பணம்? மக்கள் கட்டும்
வரிப்பண மன்றோ? யாதும்
நேர்மையை நினையா ராகி
நீதியை மதியா ராகித்
தேர்விளை யாடு கின்றார்
தெருவிடைச் சிறுவர் போலே. 7

‘நாட்டினை உயர்வு செய்யும்
நல்லதோர் நினைவை நீக்கி
வீட்டினை மேம்ப டுத்தும்
வீணர்க்கா வாக்க ளித்தோம்?
கேட்டினை வளர்ப்ப தற்கா
வாக்கினைக் கெடுத்து விட்டோம்?’
நாட்டினர் இவ்வா றெண்ணி
நலிவதைக் காணு கின்றோம் 8

மக்களை மக்கள் ஆள
வகுப்பதே மக்க ளாட்சி
மக்களை மக்கள் ஏய்க்கும்
மாண்பையே காணு கின்றோம்;
இக்குறை தீர்வ தென்றால்
எவரிடம் போயு ரைப்போம்?
தக்கவர் ஆள்வோ ரானால்
தழைத்திடும் மக்க ளாட்சி. 9

பணத்தினால் வாக்கைப் பெற்றுப்
பதவியில் அமர்ந்த பின்னர்ப்
பணத்தினைக் குறிக்கோ ளாக்கிப்
பழிகள்தாம் செய்வ தென்றால்
குணத்தினைக் கொன்று வீழ்த்தல்
குடியர சாட்சி யென்றால்,
மணத்துடன் உலக மெங்கும்
வாழிய மக்க ளாட்சி 10

---

**அருஞ்சொற் பொருள்:—**

1. ஆசற்ற—குற்றமற்ற. 2. அள்ளல்—சேறு. 3. வலம்படு—வலிமை.

## 4. ஏச்சு மேடை

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

அரங்கேறிப் பேசுகின்ற அரசியலின்
சார்பாளார் அறிவின் பண்பின்
திறங்காணும் படிபேசிச் செவிகுளிர
மனங்குளிரச் செய்வ துண்டு;
தரங்கூரும் அந்நிலையர் தமிழறிந்தோர்
சிலரானார் தமிழ கத்தில்
புறம்போகும் பேச்சாளர் புல்லறிவர்
பலரானார் புழுக்கள் போலே. 1

அரசியலின் நுணுக்கங்கள், ஆக்கவழித்
திட்டங்கள், அண்டை நாட்டில்
பொருளியலில் வளர்முறைகள், புதுமுறையில்
தொழில்வளர்ச்சி, பொதுமை நோக்கம்
விரவிவரும் உளப்பாங்கு வேத்தியலின்
வரலாறு விளக்கிக் காட்ட
உரியவரா பேசுகின்றார்? ஓரளவும்
விளங்காதார் உளறு கின்றார். 2

பண்பாட்டின் சிறப்பியல்பு, பகுத்தறிவு
விளக்கங்கள், படிப்பின் மேன்மை,
மண்மேட்டில் உழன்றுவரும் மக்களுக்கு
மறுவாழ்வு வழங்குந் திட்டம்,
கண்போலும் கல்விவளர் கழகங்கள்
உருவாக்கிக் காட்டல் எல்லாம்
எண்போட்டுக் காட்டாமல் ஏதேதோ
குழப்புகின்றார் ஏசு கின்றார். 3

கருத்தாலே கருத்தெதிர்க்குங் கலையறியார்
மன்றேறிக் கயவர் போலே
பெருத்தவசை பொழிகின்றார்; பிழைபட்ட
செய்திகளைப் பேசு கின்றார்;
பொருத்தமிலாப் பொய்ம்மூட்டை பொதுவிடத்தில்
அவிழ்க்கின்றார்; புண்ப டுத்தி
வருந்திடவே தனிமனித வாழ்க்கையினைத்
திறனாய்வர்; வைது தீர்ப்பர் 4

அவைநடுவில் தகாமொழிகள், அருவருப்பைத்
தருமொழிகள், அவர்ம னத்திற்
சுவையெனவே கொள்மொழிகள், சுடுமொழிகள்,
இழிமொழிகள் தொகுத்தெ டுத்த
[1]நவைமொழிகள், பயனில்லா நகைமொழிகள்
எதிர்ப்பவரால் நன்மை யுண்டோ?

இவைதவிர்க்கப் பொதுமக்கள் எழுச்சிகொளின்
பொதுமேடை ஏற்றங் காணும். 5

இழிமொழிகள் பழிமொழிகள் எடுத்துரைப்போன்
பேசுகிறான் என்றால் நீவிர்
குழுமாதீர்; மனம்வெறுத்துக் கூடாமல்
ஒதுக்கிவிடின் கொடியர் பேச
எழுவாரோ? நன்கொடைகள் ஈயாமல்
எள்ளிவிடின் ஏது மேடை?
அழிவுதரும் இச்செயலை அழிப்பதற்கு
நுமக்கன்றோ அறிவு வேண்டும். 6

நன்மைகளை உருவாக்கும் நாட்டமுடன்
வருவோர்க்கு நல்கல் வேண்டும்;
புன்மைகளை வளர்ப்பவர்கள் பொறுக்குவதைத்
தின்பவர்கள் புகுவா ராகின்
தன்மையிலார் இவரென்று தருகொடையை
நிறுத்திடுக தரங்கள் கெட்ட
புன்செயலுக் குடந்தையெனப் போகாதீர்
நல்லுணர்வைப் போற்றி வாழ்க. 7

---

**அருஞ்சொற் பொருள்:—** 1. நவைமொழிகள் – தீய மொழிகள்.

## 5. தேர்தலாற் கண்ட பயன்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

சாதிகளும் பொய்ம்மொழியும் தன்னலமும்
கையூட்டுந் தழைக்கும் நாட்டில்
ஏதுபயன் விடுதலையால்? என்னபயன்
தேர்தலினால்? எத்தர் வந்தே
ஓதுகிற மொழியெல்லாம் உண்மையென
நம்புபவர் உணர்வு கெட்டு
[1]மேதிகளாய் உளமட்டும் மேதினியில்
தேர்தலினால் மேன்மை யில்லை. 1

சாதியைத்தான் முன்வைத்துச் சார்கின்றார்
வேட்பாளர்; சமயம் பார்த்துச்
சாதிக்கோர் அமைச்சரெனச் சண்டைவரும்;
சாதிக்கா சட்ட மன்றம்?
மீதிப்பேர் நிலைஎன்னாம்? வீழ்ந்தவரும்
மேன்மைபெற வேண்டு மென்று
[2]சாதிப்போர் வேண்டுமலால் [3]சாதிப்போர்
தேவையிலை சட்ட மன்றில் 2

உண்மைகளைச் சொல்லிவிடின் ஒருபோதும்
வெற்றியிலை உலர்ந்து போன
மண்மதியர் முன்னின்று மனமறிந்த
பொய்ம்மொழிகள் வழங்கி விட்டால்
பெண்மையினம் வாக்களிக்கும் பேதையர்போல்
ஆடவரும் பின்னே செல்வர்
கண்ணிமைக்கும் முன்வெற்றி கண்டிடலாம்
மாலையெலாங் கழுத்தில் வீழும் 3

'பட்டினியாற் சாகவிடேன் பாட்டாளி
இனத்துக்குப் பாலும் வார்ப்பேன்
தட்டழிய விடமாட்டேன் தரமளிக்குங்
குடியொழிப்பேன் தாய்மே லாணை
அட்டவணைத் திட்டங்கள் ஆயிரத்தின்

மேலுண்'டென் றறைவர்; வெற்றி
கிட்டியதும் தன்னலமே கிளைத்திருக்கும்
பொதுநலமோ கெட்டு நிற்கும் 4

வாக்களிக்கக் கையூட்டு வாங்குகிறோம்
வெற்றியொடு வந்தோர் பின்னர்
வாக்களித்த நம்மிடமே வட்டியொடு
கையூட்டு வாங்கு கின்றார்;
ஆக்கமுளார் அமைச்சரென ஆகிவிடின்
நன்கொடையென் றதன்பேர் மாறும்;
தீர்க்கவொரு வழியில்லை தேர்தலினால்
விளைகின்ற தீமை யெல்லாம் 5

எதுசெய்தும் வெற்றிபெற எண்ணுவதால்
தேர்தலிலே இழிந்த போக்கைப்
புதுமுறையிற் காணுகிறோம்; போடுகிற
சீட்டுகளும் புகைந்து போகும்
விதிமுறையும் வேறாகும் வேட்பாளர்
சாதிகளும் வேறாய்த் தோன்றும்
பதிவான சீட்டுகளிற் பலபெயர்கள்
மாறிவரும் பறந்து போகும் 6

கற்றறிந்து சிந்தித்துக் கண்டுணர்ந்து
செயலாற்றும் கடமை வேண்டும்;
பற்றழிந்த தொண்டுளத்தைப் பண்புளத்தைப்
பொதுநலத்தைப் பாது காத்தல்
உற்றவர்க்குக் கடமையென உளத்தூய்மை
முறைமையென உணர்ந்து விட்டால்
பெற்றதொரு விடுதலைக்குப் பெருமைவரும்
தேர்தலுக்கும் பெருமை யுண்டு 7

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. மேதிகள்–எருமைகள்.
2.சாதிப்போர்–வற்புறுத்துவோர். 3.சாதிப்போர்–சாதிச் சண்டை.

## 6. அந்தோ அரசியலே!

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

### எண்சீர் விருத்தம்

ஒலிபெருக்கி முழங்கிற்றுச் சற்று நின்றேன்;
உணர்ச்சிமிக்க பேச்சாளர் தமது நெஞ்சில்
வலிவிருக்கும் வரைகத்திப் பழித்துக் கூறி
வாய்க்குவந்த படியெல்லாம் பொழிந்தார் மாரி;
அலிஎனத்தன் நிலைமறந்து மாறி மாறி
அரசியலை விளையாட்டுக் களமாக் கொண்டார்;
பலிகொடுக்க ஏமாளிக் கூட்ட முண்டு
பாவையென ஆட்டுகிறார் பகட்டுக் காரர். 1

காலையிலே ஒன்றுரைப்பார் மாலை வந்தால்
கட்சியினைக் கொள்கையினை மாற்றி நிற்பார்;
ஓலையிலே விழுந்தபுனல் போல அங்கும்
ஒட்டாமல் ஓடிடுவார்; விடிந்த பின்னர்க்
காலையிலே சொன்னதுதான் உண்மை என்பார்;
காசுக்குப் பாய்விரிக்கும் பெண்டிர் ஆனார்;
நூலறியார், அரசியலிற் கேடு செய்ய
[1]நோய்நுண்மம் படர்ந்ததுபோல் படர்ந்து விட்டார். 2

அறமுரைக்கும் பெருநூல்கள் நமது நாட்டில்
ஆயிரங்கள் உண்டென்பர்; ஆனால் அந்த
அறமனைத்தும் நூல்களுக்குள் அடக்க மன்றி

ஆறறிவு படைத்தவர்பால் அரும்ப வில்லை;
திறமிகுந்த அரசியலைப் பாழ டித்தார்
தீவினைகள் அடிதடிகள் சூது வஞ்சம்
உருவெடுத்து வரச்செய்தார்; தனிந லத்தை
உயிர்ப்பிக்கும் நிலைக்களனாக் கொண்டு விட்டார் 3

பட்டறிவும் நுண்மதியும் பொதுந லத்தைப்
பரிவுடனே புரிகின்ற தூய நெஞ்சும்
எட்டுணையும் அஞ்சாத துணிவுங் கொண்டோர்
எவர்அவரே அரசியலிற் புகுதல் வேண்டும்;
பட்டம்விடுஞ் சிறுவர்களும், பள்ளி சென்று
பயில்பவரும், குழப்பங்கள் விளைவிப் பாரும்,
கட்டவிழ்ந்த காளையரும் புகுந்து விட்டால்
கலகமலால் மற்றென்ன விளையும் அங்கே? 4

நன்றெனினுந் தீதெனினுந் தமது செய்கை
நாட்டைத்தான் சாருமென நினையா ராகித்
தின்றலையும் வாழ்வுக்கே அடிய ரானார்
சிறிதேனும் நாட்டுணர்வும் இல்லா ரானார்;
ஒன்றுணர்வால் இணைந்ததுபோல் இணைந்தி ருப்பர்
உள்ளத்தே நஞ்சதனை மறைத்தி ருப்பர்
கொன்றனைய செய்தற்கும் கூசா மாந்தர்
[2]குய்யங்கள் அரசியலில் விளைத்து நிற்பர். 5

எங்கெங்கும் வேலையில்லை, வாழ்வுக் காக
ஏதொன்றும் வழியில்லை, பிழைக்க வேண்டி
அங்கங்கே அவரவர்தம் தகுதிக் கேற்ப
அமைந்ததொரு வழியைத்தான் தேர்ந்து கொண்டார்;
இங்கிதனைத் தொண்டென்று சொல்லிக் கொள்வார்;
இதுதவிர வேறுபொருள் தெரியக் காணேன்
தங்குகிற நிழலாகத் தொண்டைக் கொண்டார்
தன்னலத்தை வளர்க்கின்ற வயலாக் கொண்டார். 6

---

**அருஞ்சொற் பொருள்–**

1. நோய்நுண்மம் – நோய்க்கிருமி. 2. குய்யங்கள் – வஞ்சனைக.ள்.

## 7. அரசியல் அரங்கம்
**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

நண்பரும் பகையாய் நலிவுகள் தரலாம்,
பகைவரும் நண்பாய்ப் பரிவுடன் வரலாம்
இருவரும் ஒருநாள் மாறலும் மாறலாம்,
அரசியல் மேடை உரைசெயும் பாடம்
ஈதென உணர்ந்தனம்; ஆதலின் அவர்தாம்
தீதெனப் பழித்தும் மேலென உயர்த்தும்
மேடையில் உரைப்பன மெய்ம்மைகள் ஆகா;
நாடக மொழியென நம்புதும் யாமே;
இனமொழி நாடென இயம்புவர் ஒருநாள்;
மனமொழி மாறி மயங்குவர் மறுநாள்;
தொண்டெனும் போர்வையில் தோன்றுவோர் பலராய்
மண்டித் திரிதலின் மக்களும் மயங்கினர்
மெய்ம்மையை மறைக்கும் பொய்ம்மைகள் பல்கலால்
பொய்யெது மெய்யெது புலப்படா தொழிந்தன;
அதனால்
ஒருவரை அளவின் றுயர்த்தலும் இலமே
ஒருவரை இகழ்தல் அதனினும் இலமே

---

**பாடற் குறிப்பு:–** 16.04.1978 ஆம் நாள் பாடியது.

## 8. வண்ணமும் எண்ணமும்
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

செங்கதிரோன் கீழ்வானில் முகத்தைக் காட்டிச்
செவ்வொளியால் உலகுக்கு வண்ணம் பூசிப்
பொங்கிவரும் பேரெழிலைப் படைக்கும் போது
பொதியத்து மலைச்சாரல் கண்டு நின்றேன்;
அங்கிருக்கும் அழகெல்லாம் விழியா லுண்டேன்
அடடாஓ! அடடாஓ! என்று நெஞ்சம்
பொங்கியதாற் கவியானேன்; ஆடிப் பாடிப்
புகலரிய இன்பத்தில் திளைத்து நின்றேன் 1

கொடிவிரித்த மலர்கண்டேன் கிளையில் நீரில்
குலவுகின்ற மலர்கண்டேன் தலைய சைத்துச்
செடிசிரிக்கும் மலர்கண்டேன் அவற்றி லெல்லாம்
செப்பரிய வண்ணங்கள் சிந்தை யீர்க்கும்
படியிருக்கக் கண்டுகளி கொண்டேன்; காற்றில்
பரவிவரும் நன்மணத்தில் ஒன்றி நின்றேன்;
செடிகொடியில் இதழ்விரித்த மலர்கள் தோறும்
தேனீக்கள் படிந்தெழுந்து போதல் கண்டேன் 2

இதழ்சுவைத்து நறவருந்தி விரைந்து சேர்க்கும்
ஈகண்டேன் எழுத்தாளர் நினைவு கொண்டேன்;
கதவடைத்த கற்பனையைத் திறந்து புக்குக்
கருத்துடனே சிந்தனையாம் மலர்தி ளைத்துப்
புதுமைமிகும் இலக்கியத்தேன் சேர்த்தல் ஒன்றே
பொறுப்புள்ள எழுத்தாளர் கடமை யாகும்;
இதழ்சுவைத்து மதுவருந்தித் திரிவோ ரெல்லாம்
எழுத்தாளர் அல்லரெனும் உண்மை கண்டேன் 3

வண்டொன்று பாடிவரக் கண்டேன் அங்கு
வண்ணமலர்த் தேன்குடித்து மயங்கி இன்பம்
கண்டவுடன் அறிவிழந்து சோலை எங்கும்
கண்டகண்ட மலர்தோறும் மாறி மாறிக்
கொண்டிருந்து பண்பாடித் திரிதல் கண்டேன்;
குடிக்கின்ற எழுத்தாளர் கொள்கை மாறிக்
கண்டபடி பாடிவரும் இயல்பைக் காட்டிக்
களிவண்டு தனைமறந்து வீழ்ந்த தந்தோ! 4

எழுத்தாளர் எனச்சொல்லி நிலையே யின்றி
இன்றொன்றும் நேற்றொன்றும் குழப்பும் பாங்கில்
முழுத்தாளில் அச்சடித்து விற்போ ரெல்லாம்
முதன்மைபெறும் எழுத்தாளர் போல நின்று
கொழுத்தார்கள் நாட்டுக்குப் பயனே இல்லை;
கும்பிக்கும் புகழுக்கும் மொழியை நாட்டைப்
பழித்தார்கள் பிழைத்தார்கள் இவரால் நாடு
பாழாகும் விழிப்புணர்வு நமக்கு வேண்டும். 5

அப்பாலோர் மரக்கிளையில் ஓந்தி கண்டேன்
அழகொழுகும் பச்சையொடு சிவப்பு மஞ்சள்
இப்பாலே கருவண்ணம் காட்டிக் காட்டி
இமைப்பினிலே நிறமாறும் விந்தை கண்டேன்;
அப்பாவி மக்களிடை மாறி மாறி
அரசியலில் நிறமாறும் மாந்தர் செய்கை
செப்பாமற் செப்புவதை நானு ணர்ந்தேன்
சிந்தையெலாம் மிகவுளைந்து திரும்பி விட்டேன். 6

வண்ணங்கள் பலபூசிப் பகலோன் வானில்
வடிவழகு செய்கின்ற மாலை வேளை
எண்ணங்கள் சுழன்றாட நடந்து சென்றேன்;

இசைகலந்த சொன்மாரி பொழியக் கேட்டேன்;
வண்ணமிலான் வடிவமிலான் இறைவன் என்பர்
'மங்கைக்குப் பங்களித்த கடவுள் மேனி
வண்ணத்திற் சரிபாதி கருப்பு, மற்றை
வடிவமெனும் ஒருபாதி சிவப்பாம்' என்றார். 7

கருப்புநிறம் சிவப்புநிறம் கலந்த மேனிக்
கடவுளவன் தென்னாட்டுக் குரியன் என்றார்;
விருப்பமுடன் செவியேற்ற என்றன் சிந்தை
விடுதலையில் அரசியலில் விரைந்த தங்கே;
கருப்புடனே சிவப்புநிறம் கலந்து வானில்
காட்சிதரும் இருவண்ணக் கொடியே இங்கும்
பொறுப்புடனே தென்னாட்டுக் குரிய தாகும்
புகுந்தவையே பிறவெல்லாம் எனநி னைந்தேன். 8

---

**பாடற் குறிப்பு:–** மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் பாடியது–22.7.1962.

## 9. நாடு உருப்படுமா?

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

நாட்டுக்கு நன்மைசெய நாடும் அரசியலைக்
கேட்டுக்கே ஆக்கிக் கிடைத்தவெலாஞ் சுற்றுகிற
தந்நலத்தை நாடும் தகவில்லாத் தன்மையரை
இந்நிலத்தே காணுங்கால் ஏங்கித் தவிக்கின்றேன்;
இங்கொன்றும் அங்கொன்றும் ஏற்ற படியுரைத்து
தங்கள் நலங்காக்கச் சண்டைகளை மூட்டிவிட்டும்
ஒட்டி யிருந்தாரை வெட்டிப் பிரித்துவிட்டும்
கிட்டும் பொருள்சுருட்டும் கீழ்மை நரிக்குணத்தர்,
நேற்றொன்றும் இன்றொன்றும் நேரியர்போல் பேசிவிட்டுக்
காற்றடிக்கும் பக்கம் கடிதோடிச் செல்பவர்கள்,
ஏழையர்தம் வாழ்வுக்கே இப்பிறவி கொண்டதுபோல்
வேளையெலாம் பொய்சொல்லி வேட்டை புரிபவர்கள்,
சாதி ஒழிப்பதெனச் சாற்றிவிட்டுத் தேர்தலுக்குத்
தேதி வரும்போது சாதிக்குக் காப்பளிப்போர்,
கூடி அரசியலைக் கொண்டு நடத்துவரேல்
நாடிங் குருப்படுமோ நன்கு?

---

**பாடற் குறிப்பு:–** 1.3.1970 ஆம் நாள் பாடியது.

## 10. தேர்தல் திருவிழா

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

கலிவெண்பா

தேர்தல் திருவிழா என்றிங்குச் செப்பிவைத்த
சீர்மை மிகநன்று; சீர்தூக்கிப் பார்த்திடுவோம்;
உள்ளூறும் அன்பால் உருகும் அடியவரும்
[1]அள்ளூறி நின்றிருப்பர் அந்தத் திருநாளில்;
உள்ளத்தில் வஞ்சம் ஒளித்தமைத்துச் செய்கின்ற
கள்ளத்தை யாருமே காணா வகைசெய்யப்
பூச்சால் மணியால் பொதிந்த திருமேனி
ஆச்சார சீலர் அவரும் அருகிருப்பர்;
தின்பண்டம் விற்போரும் செய்தசிறு பாவைகளை
முன்வந்து விற்போரும் மொய்த்தங்கு நிற்றலுண்டு;
ஆண்பாலர் பெண்பாலர் ஆடுஞ் சிறுபாலர்
காண்பார் பெரும்பாலோர் கைகளையும் பைகளையும்
கண்ணால் துருவுகின்ற கைவரிசைக் காரர்களும்
பின்னால் தொடர்ந்து பெரியவர்போல் நின்றிருப்பர்;

காதுகளும் நோவாமல் யாருமதைக் காணாமல்
மோதுகிற கத்திரியும் முன்னிற்கும்; அஃதேபோல்
நாட்டுக்குத் தொண்டுசெயும் நல்லெண்ணங் கொண்டோரும்
வேட்டிங்குத் தேர்தலிலே வேட்பாளர் ஆவதுண்டு;
நாளெல்லாம் ஊரார்பால் நம்பும் படிபேசி
வாழ்வெல்லாம் பொய்க்கின்ற வஞ்சம் தனைமறைக்கச்
சட்டைத் துணிமாற்றித் தாயகத்தைக் காப்பனென
ஒட்டித் திரிகின்ற உத்தமரும் நிற்பதுண்டு;
வீரங்கள் பேசிவிட்டு வேட்பாள ராய்நின்று
பேரங்கள் பேசும் பெருமனிதர் தாமுமுண்டு;
விண்ணப்பந் தந்துவிட்டு வீட்டிற்குச் சென்றவுடன்
எண்ணத்தில் சூழ்ச்சிமுறை எத்துணையோ எண்ணியெண்ணி
எங்குப் பணங்கிடைக்கும் என்று தவங்கிடக்கும்
தங்கக் குணம்படைத்தோர் தாளுருவங் கண்டவுடன்
முன்வாங்கிக் கொண்டு முகமூடிச் சென்றுடனே
பின்வாங்கிப் போய்ப் பதுங்கும் பேதையருங் காண்பதுண்டு;
முன்னாளில் இந்நாட்டில் தேர்தல் நடந்ததுண்டு—
அந்நாளில் தென்னாட்டார் ஆக்கிவைத்த தேர்வுமுறை
எந்நாடுங் காணாத ஏற்றந் தருமுறையாம்
அன்னார் குடவோலை என்றே அதைச்சொல்வர்
தக்கார்யார் நிற்கத் தகுதியிலார் யாரென்றே
அக்கால மக்கள் அமைத்த விதியுண்டு;
கையூட்டுப் பெற்றார், களவாடல் செய்தவர்கள்,
பொய்ச்சான்று சொன்னோர் புகுந்தகுதி யில்லாரே
என்றுரைத்த சட்டத்தை இன்றெடுத்து நோக்குவமேல்
நின்றிங்கு மிஞ்சுபவர் நேர்பாதி காண்பரிது;
தொண்டறியார் ஆட்சிமுறை கண்டறியார் தங்கருத்தை
விண்டறியார் ஆனாலும் வேட்பாளர் ஆகிநின்று
மக்கள் தமையணுகி மாயங்கள் செய்வதெலாம்
மிக்க நகையாகும்; மேட்டுக் குடிவாணர்
வீட்டுக்கு வீடு வெளிநின்று பல்லெல்லாம்
காட்டுதற்கு நாணார்; கலிகாணா மேனி
வளையும் குழையும் வணங்கித் துவண்டு
நெளியும் மறுநாள் நிமிரும் அடடா!
நடக்காத கால்கள் நடந்துவரும், ஒன்றுங்
கொடுக்காத கைகள் கொடுத்துவரும்; தேர்தலிலே
வாக்காளர் எல்லோரும் வானுறையுந் தெய்வங்கள்
பார்க்காத பேரெல்லாம் பார்த்திடுவர் கும்பிடுவர்;
வெற்றி கிடைத்துவிடின் வேட்பாளர் மேலாவர்
வெற்றுப் படிக்கல்லாய் வீழ்ந்திடுவர் வாக்காளர்;
மாண்டவரும் மீண்டுவரும் மாய விளையாட்டைக்
காண்டல் எளிதாகும் இந்தத் திருநாளில்;
விந்தைமிகும் வேடிக்கை எத்துணையோ தேர்தலெனும்
சந்தையிலே காணும், சதிகள் விளையாடும்;
நிற்பவர்கள் நிற்கட்டும் நேர்மை நிலைநாட்டல்
கற்றவர்க்கும் மற்றவர்க்கும் உற்ற கடனாகும்;
தீட்டுகிற திட்டத்தால் ஈட்டும் வளமெல்லாம்
நாட்டில் ஒருதிசையில் நன்கு வளர்ப்பவர்தாம்
தேய ஒருமைஎன்று தீந்தமிழை மாய்ப்பதற்கே
ஆய வழிவகைகள் ஆற்றும் நிலைகண்டோம்;
இந்தி மொழியொன்றை இங்கே திணிக்கின்றார்
அந்தநிலை போதாதென் றன்று தமிழ்மாந்தர்
ஆய்ந்தமைத்த நல்லெழுத்தை அப்படியே நீக்கிவிட்டுக்
காய்ந்து சிறுகயிற்றில் தொங்குகிற [2]கண்டம்போல்
நேர்கோட்டில் தொங்கும் நெளிவெழுத்தைக் காட்டுகிறார்
யார்கேட்பர் இந்நாட்டில் என்னும் நினைவவர்க்கு;
நம்பால் இவர்தாமும் நல்வாக்குக் கேட்கின்றார்;
வெம்பி யிருக்கையில் வேறோர் திசைதன்னில்
நாட்டில் தருமம் நலிந்ததென்று கண்கலங்கி
நாட்ட வருகின்றார் நான்கு வகைத்தருமம்;
தந்திரத்தால் நல்ல தருமத்தின் பேர்சொல்லி
மந்திரங்கள் ஓதி வருபவரைக் காண்கின்றோம்;
தாய்நாட்டுப் பற்றினிலும் தாய்மொழியின் அன்பினிலும்
சேய்நாட்டுப் பற்றுமிகுஞ் சிந்தையரும் கேட்கின்றார்;

‘அன்று முடியரசர் ஆண்ட திருநாட்டை
இன்று பெறுவோம் இனவழியில் ஒன்றாவோம்’
என்று முரசார்த் தியங்குகிற ஓரணியில்
நின்றுபணி செய்வோரும் நேர்நின்று நம்மிடத்தே
‘உங்கள்நல் வாக்கை உவந்தே கொடுத்திடுக
எங்கட்கே என்றுநமைக் கேட்கின்றார் இந்நாளில்;
யாருக்கு வாக்களிப்போம் என்றுமிகச் சிந்தித்துப்
பாருக்கு நன்மைதரும் பான்மைதனை மேற்கொள்க!
காசு பணங்காட்டிக் கைநீட்டிக் கேட்பவரை
வீசி எறிந்திடுக! விற்காதீர் தன்மானம்!
நாளைக் கொருகொள்கை பேசும் நயவஞ்சர்,
தாளைப் பிடிப்பார்கள் தந்து கெடுக்காதீர்!
நாட்டைத் திருத்திடுவேன் என்று நமையேய்ப்பர்
வீட்டைப் புதுக்கலன்றி வேறொன்றும் தாமறியார்
ஆங்கவர்க்கும் வாக்கை யளிக்காதீர்! சாதிஎனும்
நீங்காப் பெருநோயை நேர்நிறுத்திக் கேட்பவர்க்கும்
கண்ணோட்டங் காட்டாதீர்! காட்டிவிடின் தன்தலைமேல்
மண்வாரிப் போடும் மதயானை போலாவீர்;
ஆதலினால் எப்பிழைக்கும் ஆளாகிப் போகாமல்
தீதறியா நல்லோரைத் தேர்தலிலே கண்டறிக!
சாதி சமயமென்று தாழ்வுயர்வு சாற்றுதலை
மோதித் தகர்த்தெறியும் முன்னேற்றப் பண்பினரை,
ஏழைமையைப் போக்கி இனிமைமிகும் வாழ்வுதரும்
தோழமையை நெஞ்சில் துணையாகக் கொண்டவரை,
செந்தமிழின் ஆக்கஞ் சிதையாமல் காப்பவரை,
நொந்திருக்கும் நாட்டவரின் நோவைத் தணிப்பவரை,
கற்றவரைத் தந்நலங்கள் அற்றவரை மெய்யொன்றே
சொற்றவரைத் தூயவரைத் தொண்டுள்ளம் பெற்றவரை
நன்றாய்ந்து தேர்ந்தெடுத்து நாடாளச் செய்வோமேல்
நன்றாக வாழும்நம் நாடு.

---

**பாடற் குறிப்பு:–**
மதுரை தியாகராசர் கல்லூரிக் கவியரங்கில் பாடியது–27.1.1962.

**அருஞ்சொற் பொருள்–**
1. அள்ளூறி – மனமுருகி. 2. கண்டம் – உப்புக்கண்டம்.

## 1. தேர்தல் நினைவு
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

இரவெனும் நங்கை வந்தாள்
    என்விழி துயிற்ற எண்ணிப்
பிறையினிற் குளிரெ டுத்துப்
    பிச்சியில் மணமெ டுத்து
வருமிளந் தென்றல் கொண்டு
    வீசினள்; வைய மெல்லாம்
இருளிய பின்னும் என்றன்
    இமைகளோ இணைய வில்லை. 1

தேர்தலை நினைந்து விட்டேன்
    சிந்தையும் உறங்க வில்லை;
நேர்மையை அங்குக் காணேன்
    பொய்ம்மையே நெளியக் கண்டேன்;
தேர்வரும் நாளைப் போலத்
    தெருவெலாம் கூச்சல் கேட்டேன்
ஊர்வலம் பலவுங் கண்டேன்
    உண்மையே காண வில்லை. 2

உண்மையே சிறிது மில்லார்
    ஊரினை ஆள வந்தால்
கண்ணியம் நிலைப்ப தெங்கே?
    கயமைதான் ஓங்கி நிற்கும்;

பெண்மையை விலைக்கு விற்போர்
கற்பினைப் பேச வந்தால்
மண்மிசை என்ன வாழும்?
மதியுளர் நகைப்ப ரன்றோ? 3

தடியடி குத்து வெட்டு,
தையலர் கற்பை யுண்ணுங்
கொடியரின் செயல்கள், கொள்ளை
கொலைகளுங் கூட லன்றி
விடியலா காணல் கூடும்?
விழிகளா துயிலும்? எங்கும்
இடியொலி கேட்ப தன்றி
இன்னொலி யாதுங் கேளேன். 4

நாட்டினைக் கருத வில்லை
நலங்களும் விளைய வில்லை
வீட்டினைக் கருது வோரால்
வேறென்ன விளையு மிங்கே;
கேட்டுணர் வுடையோர் ஆண்டால்
கீழ்மைதான் விஞ்சும் இங்கே
நாட்டுணர் வுடையோர் வந்தால்
நலமெலாம் பொங்கும் பொங்கும். 5

## 12. கழகம் வென்றது

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

அண்ணா அண்ணா அருஞ்சிறைக் கொட்டிலுள்
நண்ணும் நுமக்கோர் நற்செய்தி கூறுவென்;
கழகம் வென்றது கதிரொளி பரந்தது;
தொழுதனர் மாந்தர் தூயவர் வாழ்த்தினர்;
காசும் பணமும் காவற் படையும்
ஏசும் பேச்சும் இவையே துணையென
நின்றனர் எதிரில் நெடுநாள் ஆள்வோர்
இடர்பல ஏற்பினும் தொடர்பணி புரிவோர்;
உடலும் உயிரும் உழைப்பும் துணையெனப்
படைபோல் அணிவகுத் துடனெதிர் நின்றனர்;
கொல்வினைப் போக்கினர் சில்லரை நோக்கினர்
சல்லியர் கூடிச் சாடினர் நம்மை
ஐயஓ சுமத்தினர் அடாப்பழி ஆயினும்
செய்ம்முறை பிழைத்திலர் செந்தமிழ்த் தொண்டர்;
கழகம் வென்றது கதிரொளி பரந்தது;
காற்றிற் சாய்வோர் கண்டதை மேய்வோர்
தூற்றித் திரிவதே தொழிலெனக் கொண்டோர்
கோப்பை ஒன்றே குடிபுகும் உலகென
மோப்பம் பிடிப்போர் முகங்கவிழ்ந் தேகினர்
வஞ்சகர் எத்துணை வாய்ப்பறை சாற்றினும்
செஞ்சுடர் வளர்ச்சியைச் சிதைப்பதும் ஒல்லுமோ?
கோநகர் தன்னில் மாநகர் மன்றில்
வாகை சூடி வளர்ந்தது கழகம்;
அரியென முழங்கி எரியெனச் சொற்போர்
புரியும் வீரன் போரினில் தீரன்
உரியநம் தம்பி உழைப்பால் உயர்ந்தோன்
.......... ............. ............ .......
[1]கறங்கெனச் சுழலும் கழகத் தோழர்
பறந்துபறந் தாற்றிடும் அயராப் பணியினர்
துட்ட விலங்குகள் உட்புக விடாது
வட்டந் தோறும் வட்டமிட் டுலவினர்;
போர்க்களம் புகுந்தனர் புரிந்தனர் அறப்போர்;
சேர்த்தனர் வெற்றி ஆர்த்தனர் வீரர்;
சென்னை மாந்தரை முன்னணி வீரரைச்
சென்னி தாழ்த்தி வாழ்த்துவென் யானே;

அண்ணா அண்ணா வாழ்த்துக அண்ணா
'நண்ணார் நமக்கிலை நாடுநம் குறிக்கோள்
மாநகர் நலம்பெற மாநக ராட்சியை
ஏந்துக கழகம்' என்றுநும் நாவால்
வாழ்த்துக அண்ணா வாழ்த்துக பெரிதே.

---

**பாடற் குறிப்பு>–** மாநகராட்சித் தேர்தலில் கழகம் வென்ற போது பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1 .கறங்கு – காற்றாடி.

## 13. காக்குந்தொழில்வல்லான்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

சிந்திக்க மாட்டாமல் சீரிழந்து நிற்கின்ற
முந்தைத் தமிழ்நாட்டில் மொய்த்துத் துயர்ப்படுத்தும்
கண்மூடிக் கோட்பாட்டைக் கட்டோடு சுட்டெரித்து
மண்மூடிப் போக மறைத்துத் தொடர்ந்திங்கு
நல்ல அறிவூட்ட நாட்டை வளமாக்கத்
தொல்லை இருளகற்றத் தோன்றும் சுடரிரண்டு;
ஒற்றைச் சுடர்தோன்றும் ஊரதுதான் ஈரோடு
மற்றைச் சுடர்தோன்றி வாழிடமோ காஞ்சிநகர்;
தோன்றும் ஒருசுடர்க்குத் தொன்னூறு மேவிவரும்
ஆன்றதொரு செஞ்சுடர்க் காறுபத்து தாவிவரும்;
ஈரோட்டில் தோன்றுசுடர் எந்நாளும் ஓய்வின்றிப்
போராட்டஞ் செய்துவரும் பொன்றா நெருப்பாகும்;
காஞ்சிச் சுடரோ கனலாது காய்ந்துமன
வாஞ்சைக் கதிரால் வளர்ந்துவரும் ஞாயிறது;
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்;
மாயிரு ஞாலம் வளமுடன் வாழ்ந்திட
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்;
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போற்றுதும்;
எண்ணும் மனத்தில் இனித்திருக்கும் நல்லவனாம்
அண்ணன் புகழ்சொல்ல ஆயிரம் நாவேண்டும்;
பொன்றாப் புகழ்மணக்கும் புண்ணியன் நற்குணங்கள்
ஒன்றா இரண்டா ஒருபொழுதில் பாடுதற்கு?
தோற்றுவித்த கட்சி துவளாமல் காத்துவந்த
ஆற்றலுக்கு நேர்சொல்ல ஆளொருவர் ஈங்கில்லை;
'காளையரைக் கொண்ட கழகம் வளர்ந்துவிடின்
நாளைநிலை என்னாகும் நாடே அவர்வயமாம்'
என்றஞ்சிப் பேரரசை ஏற்றிருந்த நல்லோர்கள்
அன்று தடைச்சட்டம் ஆக்கி விடுத்தார்கள்;
'போயிற்றுப் போயிற்றுப் பூண்டோடு போயிற்று
வாயற்றுப் போயிற்று வாயேது கட்சிக்'கென்
றார்ப்பரித்து நின்றார் அரசியல் சோதிடர்கள்;
போர்ப்பயிற்சி நன்கு புரிந்திருக்கும் நம்அண்ணன்
தாக்கவந்த சட்டம் தலைதூக்க மாட்டாமல்
ஆக்கிவைத்த ஆற்றல் அறிவுளார் போற்றுகின்றார்;
குட்டிக் கலகங்கள் கோள்மூட்டல் அங்குமிங்கும்
எட்டிப் பிடித்தே இறுகமுடி போடல்என
நாளெல்லாம் ஆடிவரும் நாரதர்கள் கூடிஒரு
கேளல்லார் தம்அணைப்பில் கேடு விளைத்தார்கள்;
பேசா தனபேசிப் பேயாட்டம் ஆடிவந்தார்
ஏசா தனவெல்லாம் ஏசி எழுதிவந்தார்;
கூடிக் களிக்குங்கால் கோமான் புகழொன்றே
பாடிப் பிழைத்தவர்கள், பண்பாளன் கால்களையே
ஓடிப் பிடித்தவர்கள், ஊர்ஊராச் சென்றுபல
சாடிப் பழித்தார்கள் சாகும் கழகமென
ஆடிக் களித்தார்கள் ஆகாத கூட்டுறவைத்
தேடிப் பிடித்தார்கள் தேய்பிறைபோ லானார்கள்;
சட்டமென வந்த தடையாம் புறப்பகையால்
எட்டுணையுங் கேடின்றி ஏற்றமிக நம்அறிஞன்
காத்த கழகத்தைக் காழ்ப்பு மிகுதியினால்

வாய்த்த அகப்பகைதான் வாடிடச் செய்திடுமோ
என்றஞ்சித் தொண்டரெலாம் ஏங்கி யிருக்குங்கால்
நன்றெண்ணிச் செய்தான் நயவஞ்சப் போக்கெல்லாம்
சென்றொழியச் செய்தான் சிறுமைப் பகையனைத்தும்
வென்றுமலர் வாகை விறல்மாலை சூடிநின்றான்;
ஆண்டுபல வாக அரசிருக்கை வீற்றிருந்தே
ஆண்டிருந்தோர் தம்மை அசைப்பதற்கு யாருமிலர்
என்ற செருக்காலே எக்காள மிட்டவர்கள்
நின்றுதடு மாறி நெடுமூச்சு வாங்கவைத்தான்;
நாகம் படர்ந்திருக்கும் நச்சுப் பெருமரத்தை
வேகப் புயலாகி வேரோடு சாய்த்துவிட்டான்;
சாடும் புயலாகிச் சங்காரம் செய்தபினர்ப்
பாடுமிளந் தென்றலெனப் பாராண்டு நிற்கின்றான்;
மக்கள் நலங்காத்து மாநிலத்தார் நெஞ்சமெலாம்
புக்கிருந்து வாழ்ந்து பொலியும் உயிராகி,
மாந்தர் உயிரானால் மன்னுயிர்கள் அத்தனையும்
ஏந்தும் உடலாகி ஈடின்றி ஆள்கின்றான்;
காக்குந் தொழில்வல்லான் காட்டும் நெறிநடத்தல்
யார்க்கும் நலமென்பேன் யான்.

---

**பாடற் குறிப்பு:–** 29.9.1968 ஆம் நாள் பாடியது.

## 14. வெற்றி மலர் சூடுங்கள்!

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

நம்மை வளர்த்துவிட்ட நல்லவன் தாயுளத்தை
இம்மா நிலத்தே எவரிடத்துங் கண்டதில்லை;
'பண்பட்ட தம்பியராம் பன்னூற்றின் ஆயிரவர்
எண்ணிட்டுக் காட்ட இயலாரைச் சேர்த்தென்னைத்
தாயொருத்தி தன்வயிறு தாங்காத காரணத்தால்
போய்வயி றொவ்வொன்றும் புக்குப் பிறந்தோம்நாம்'
என்று மொழிந்தவன்றன் ஈடில்லாப் பண்புளத்தை
இன்று நினைத்தாலும் என்பெல்லாம் நெக்குருகும்;
நாட்டை வயமாக்கும் நாவல்லான், நற்றமிழை
ஏட்டில் எழுதிமெரு கேற்றும் எழுத்தாளன்,
நாடும் அரசியலை நன்காய்ந்த பேரறிஞன்,
வாடும் எளியோர்க்கு வாழ்வு தரவந்தோன்,
நண்பாளன், பண்பாளன், நாடகத்துப் பேராசான்,
கண்போல வாய்த்தஒரு காஞ்சி புரத்தலைவன்
என்றெல்லாம் நாட்டவர் ஏத்திப் புகழுரைத்தார்;
ஒன்றாலும் நம்அண்ணன் உள்ளம் மயங்கவில்லை;
மாறாட்டம் இல்லாமல் மக்கள் நலங்கருதிப்
போராட்டம் நூறு புரிந்தானைத் தன்னாட்டில்
ஏழை துயர்துடைக்க வெஞ்சிறைகள் ஏற்றானைக்
கோழை எனப்பழித்தான் கொள்கை சிறிதுமிலான்;
போராட்டம் என்றாலே போய்ப்பதுங்கும் குள்ளநரி
ஈரோட்டார் தந்தஅரி யேற்றைப் பழித்ததுகாண்;
அண்ணன் குடும்பத்தை அப்பிறவி ஏசிவந்த
வண்ணம்போல் யாரும் வடிக்க இயலாது;
வஞ்சத்தார் என்னென்ன வைதாலும் தாங்குகிற
நெஞ்சத்தான் நம்அண்ணன் நின்றநிலை மாறவில்லை;
வாடி வதங்கவில்லை வாய்த்தஒரு போர்க்களத்தில்
ஓடி ஒளியவில்லை ஊக்கங் குறையவில்லை;
மற்றவரைப் பாராட்டி வாயாரப் போற்றுவான்
மற்றோர் தனைப்புகழ்ந்தால் மங்கையர்போற் கூசுவான்;
ஆவிக்குள் ஆவியென ஆகிக் கடற்கரையில்

மேவித் துயில்கொள்ளும் மேலோனைத் தூற்றுகிறான்;
தாயைப் பழிக்கத் தயங்காத மாபாவி
வாயைத் திறந்தின்னும் வைதே திரிகின்றான்;
‘பொய்யை முதலாகப் போட்டே அரசியலைச்
செய்யுந் தலைவ’னெனச் செத்தபினும் திட்டுகிறான்;
பொய்யில் பிறந்தமனம் பொய்யில் வளர்ந்தஉடல்
பொய்யால் வளர்உருவம் புத்தனையா ஏசுவது?
அண்ணாவை மிஞ்சிவிட்டார் ஆரூர்க் கலைஞரெனப்
பண்ணால் முடிபோட்டுப் பாடுகிறான் பாடட்டும்;
அண்ணா அமைத்த அருமைக் கழகத்தைக்
கண்போற் கலைஞரவர் காக்குங் கழகத்தைச்
சைத்தான் எனப்புகன்று சாக்கடையில் வந்தமொழி
வைத்தான் நமக்கெதிரில் வாய்மூடி நிற்கின்றோம்;
தன்னலத்தால் இற்றைத் தலைவருக்குப் பூமாலை
சொன்னலத்தால் சூட்டுகிறான் சூட்டட்டும் வாழட்டும்;
ஆனால் கழகத்தை அப்பேதை வாய்புளிக்க
ஏனோ பழிக்கின்றான்? ஈதென்ன விந்தை!
கலைஞர் இனிப்பாம் கழகம் கசப்பாம்
நிலைபுரிய வில்லைஎன் நெஞ்சம் பொறுக்கவில்லை;
பேதைத் தனமென்று பேசா திருப்பதா?
போதைச் செயலென்று பூனைபோல் நிற்பதா?
பேசா திருந்தவன்தான் பேதைத் தனமென்றே
ஏசா திருந்தவன்தான் என்றாலும் எல்லையின்றிப்
போதலால் என்றன் பொறுமை தனையிழந்தேன்
ஆதலால் பாட்டுக்குள் ஆவேசங் காட்டிவிட்டேன்
சூடு மிகையாகத் தோன்றுமோ என்பதனால்
சாடும் முறையதனைச் சற்றே நிறுத்துகின்றேன்;
அண்ணாவைப் போற்றுவோம் அண்ணன் வழிநிற்போம்
கண்ணேபோல் எண்ணிக் கழகத்தைக் காத்திடுவோம்
அய்யாவும் இன்றில்லை அண்ணாவும் இன்றில்லை
மெய்யாக நம்மினத்தை மேலோங்கச் செய்பவரார்?
என்றுநாம் ஏங்குகையில் ஈதோ இருக்கின்றேன்
என்று குரல்கொடுத்தார் ஈரோட்டார் பேரரிவர்;
ஈடில்லா அண்ணன் இதயத்தைப் பெற்றுள்ள
பீடுள்ளார் நம்வீட்டுப் பிள்ளை எனஆனார்;
ஈரோட்டுப் பள்ளியிலே ஏடெடுத்துக் கற்றுணர்ந்து
பாராட்டுங் காஞ்சிபுரப் பல்கலைசேர் மன்றத்தில்
கற்றுத் தெளிந்து கலைஞர் எனும்பட்டம்
பெற்றுத் திகழும் பெருமை மிகவுடையார்;
காற்றடித்த போதுங் கழகம் எனும்விளக்கை
ஏற்றி அணையாமல் எந்நாளும் காக்கின்றார்;
இன்றைக் கவர்பெருமை ஏற்றிளங் காளையர்க்கு
நன்று தெரியாது நாளை புலனாகும்.
நாட்டை வளமாக்க நம்மினத்தை முன்னேற்றப்
பாட்டை அமைக்கின்றார் பங்காளி ஆகிடுவோம்;
வீறுநடை போடுங்கள் வெற்றிமலர் சூடுங்கள்!
கூறுகிறேன் என்கை குவித்து.